அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் V.] MARCH, 1905—௵ மார்ச்சு. [இலக்கம் 1.

பிராணிகளுக்குரிய உவமைச் சொற்கள்.

பக்ஷிபோலப் பறக்கிறான்.

இப்பொழுது நூதனமாக ஏற்பட்டிருக்கும் **மோடார்** என்கிற தானே ஓடுகிற வண்டியானது வழிமுழுவதும் மிகுதியாய்த் தூளி கிளம்பப் பயங்கரமான வேகத்துடனே உங்களை இழுத்துக்கொண்டுபோகும். **பைஸைகில்** என்கிற இருசக்கர வண்டியிலேறிக்கொண்டு அதிசயமான வேகத்துடனே இக்காலத்தில் அநேகர் அதைக் காலால் செலுத்திக்கொண்டு போகிறார்கள். இவைகள் அல்லாமலும் இப்பூமியில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போக மனிதர்கள் மரக்கலம், ஆகாய விமானம் முதலான பல வாகனங்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆயினும், இதுவரையிலும் மனிதர்கள் யுத்தி புத்தி ஸாமார்த்தியங்களால் செய்த யந்திரமொன்றேனும் பக்ஷியினது வேகத்திற்குச் சமமான வேகமுடையதாகவில்லை ஆனால், பக்ஷிகள் எந்த முறையைக்கொண்டு சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனவோ, அதேமுறையை அனுசரித்துப் பறக்கும் யந்திரம் நிருமிக்கப்பட்டால், காரியசித்தி பெறலாமென நாம் நினைக்கக்கூடுமென்று சாஸ்திர பரிசோதனை செய்தவர்கள் சொல்லுகிறார்கள். நாம் இப்பொழுது ஒரு சிறுவனைப் பார்த்து, 'பக்ஷியைப்போலப் பறக்கிறான்' என்று சொன்னால், காலில் எவ்வளவு வலியுண்டோ அவ்வளவு வேகமாக நடக்கிறான் என்றாவது, அல்லது அவனுக்குக் கிடைத்த வாஹனம் எவ்வளவு வேகமாகப் போகுமோ, அவ்வளவு வேகமாகச் செல்லுகிறானென்றாவது நாம் சொல்வதாகவே பலர் நினைப்பார்கள். பக்ஷிகள் பறப்பதைப் பற்றிச் சற்று விசாரிப்போம்.

பக்ஷிகள் பறப்பதாவது இலேசான காரியமன்று. விசேஷமாகப் பரிசோதனை செய்தவர்களுக்கல்லது, மற்றவர்களுக்கு இந்த விஷயம் நன்றாகத் தெரியாது. மற்றச் சாதாரணமான மனிதர்களெல்லாம் என்ன நினைத்திருக்கிறார்களென்றால், பறவைகளின் உடல் காற்றைப்பார்க்கிலும் இலேசானதென்றும், அந்த உடலில் இருபுறமும் இரண்டு சிறகுகள் அமைக்கப்பட்டிருப்பதால் பக்ஷிகள் சுலபமாகப் பறக்கின்றனவென்றும், அப்படிப் பறப்பது அவைகளுக்கு ஒரு வருத்தமான வேலையல்லவென்றும், பறந்துகொண்டே வேண்டிய இடத்திற்குப் போவது பறவைகளுக்குச் சுகமும் விநோதமுமான காரியமென்றும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்; பறப்பது சோம்பேறித்தனமான வேலையென்றும் சிலர் நினைக்கிறார்கள்.

நன்றாக ஆராய்ந்து பார்த்தால், பறப்பது மிகவும் கடினமான வேலையென்று நன்றாக விளங்கும். வானத்தில் பறப்பதனா லுண்டாகும் ஆநந்தத்தை நல்ல வலிவான தேகமுள்ள பறவைகளே நன்றாய் அனுபவிக்கின்றன. நல்ல தேகசௌக்கியமுள்ள பக்ஷிகளின் உடலில் சோம்பேறித்தனமான எலும்புகள் ஒருபொழுது மிருப்பதில்லை. சில பறவைகளுக்கு உடலில் எலும்பு அல்லது இறகுக்குள்ளே காற்று அடைந்து, வெளிக்காற்றைப்பார்க்கிலும் மிகவும் இலேசான உடலு மிருப்பதுண்டு; ஆனாலும் அப்படிப்பட்ட எலும்புகளும் காற்றுப்பைகளும் பறப்பதற்குச் சிறிதேனும் அநுகூலமாவதில்லை.

நன்றாகப் பறக்கிற வௌவால் முதலான பக்ஷிக

ளுக்கும், தேசாந்தர ஸஞ்சாரம் செய்யும் உள்ளான் தூக்கணங்குருவி முதலான பறவைகளுக்கும் அப்படிப்பட்ட காற்றுப் பைகளுமில்லை, காற்றடைந்த எலும்புகளுமில்லை. பறப்பதற்கு இறகுகள் அவசியமானவையல்ல. வெளவால்களுக்கும் பல பூச்சிகளுக்கும் இறகுகளேயில்லை. ஆயினும் அவை வெகு நன்றாகப் பறக்கின்றன. அவைகளைப்பார்க்கிலும் அதிசயமாக ஒரு பக்ஷியும் பறப்பதில்லை. பறப்பதற்குப் பின்சொல்லு மிரண்டில் ஏதாவதொன்று அவசியம் வேண்டும். அவையாவன, பறக்கும் பக்ஷிகளுடைய ரக்கைகள் மிக்க வலிவுடனே காற்றையாவது கெட்டித் தள்ளிக்கொண்டு போகவேண்டும்; அல்லது, காற்றாவது பக்ஷி ரக்கைகளைத் தள்ளிக்கொண்டுபோகவேண்டும். ஆலோசித்துப்பார்க்கும் வருத்தத்தை மேற்கொள்ளாத சோம்பேறிகள், காற்று வலிவாக வீசும்பொழுதும் வருத்தமும் முயற்சியுமில்லாமலே பக்ஷிகள் பறந்து போவதாயெண்ணி, பக்ஷிகளின் உடம்பு வெகு இலேசாயிருப்பதால் அவை அப்படிப் பறக்கச் சாத்தியப்படுகிறதென்று எண்ணுகிறார்கள்; மிகவும் பளுவான சரீரமுள்ள பெரிய பறவைகள்கூடக் காற்றடிக்கையில் பிள்ளைகள் விடும் காற்றாடி பறப்பதுபோலவே ஆநந்தமாகப் பறக்கும் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். மிகவும் பெரிய பறவையான கின்னரப்புள் தன் பெரிய சிறகை விரித்துக்கொண்டு வானத்தில் வாயுவேகத்திலே வெகு விநோதமாய்ப் பறந்து செல்லும்; ஆயினும் அந்தப் பக்ஷி சமுத்திரத்தின்மேல் இறங்கிவர நேரிட்டால், மறுபடி அது மேலே கிளம்புவதற்கு வெகு பிரயாசப்படவேண்டும். அது பலதரம் சிறகடித்துத் தன் பலத்தையெல்லாங்கொண்டு சிறகுகளால் கடல் நீரை அடித்தாலன்றி மேலே கிளம்ப அதனால் முடிவதில்லை. பெரிய உருவங்களெல்லாம் தம்மினும் சிறிய உருவங்களைத் தம்மிடத்திற்கு இழுக்கின்றனவென்பது பொதுவிதி. அதன்படி இப்பூமியும் பெருங்கடலும் பறக்கும் பக்ஷிகளைத் தம் இடத்திற்கு இழுக்கின்றன. அதனால் கடலின்மேல் இறங்கிய பக்ஷி, கடல் தன்னைக் கீழே இழுக்க, அதற்கு மாறாக மன்றாடி மேலே கிளம்பவேண்டியிருக்கிறது. ஆதலால், பக்ஷிகள் ஆகாயத்திலெழுந்து பறப்பது நமது பார்வைக்கு வெகு சுலபமாகத் தோன்றினாலும், நீந்துவோனுக்குத் தண்ணீரில் உண்டாகும் பிரயாசைபோலவும், காற்றாடிக்குக் காற்றில் உண்டாகும் அல்லாட்டம்போலவுமே பறக்கும் பறவைக்கும் பிரயாசையுண்டு.

பூச்சிகளில் தட்டாரப்பூச்சியும், பக்ஷிகளில் நாரையும் இலேசான சரீரமும் பெரிய சிறகுமுடையவைகளுக்கு உதாரணம். வண்டும் கவுதாரியும் கனமான சரீரமும் சிறிய சிறகு முடையவை; ஆயினும் இவை எவ்வளவு சிறப்பாகப் பறக்கின்றன பாருங்கள். மேலும், ரக்கைகள் பெரியவையா யிருப்பதற்கும் உடல் பெரிதாயும் கனமாயு மிருப்பதற்கும் நிலையானசம்பந்தம்சிறிதேனுமிருப்பதாய்க்காணப்படவில்லையென்று சாஸ்திர பரிசோதனை செய்து பார்த்த பண்டிதர்சொல்லுகிறார்கள். ஏனென்றால், பல பூச்சிகள், வெளவால், பக்ஷிகள் இவற்றின் சிறகுகள் உடல்கள் இவைகளின் பரிமாணத்தை ஒப்பிட்டுப் பார்க்குமளவில், சிலவற்றிற்குச் சிறகு சிறுத்தும் உடல் பருத்துமிருக்கின்றன; சிலவற்றிற்குச் சிறகு பருத்தும் உடல் சிறுத்துமிருக்கின்றன. மேலும், உடல் எவ்வளவுக்கெவ்வளவு பருத்திருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு பக்ஷி பறந்துசெல்லும் வழியின் அளவு குறுகி யிருக்கவேண்டுமென்றும் பிரான்சு தேசத்துத் தத்துவசாஸ்திரி ஒருவர் கண்டறிந்து கூறியிருக்கிறார். வானத்திற் பறக்கும் யந்திரம் செய்பவர்கள் இந்த நியாயத்தை அனுசரித்தே, யந்திரம் பளுவுள்ளதானால் அதை நெருக்கி அழுத்தமாய்ச் சிறிதாகச்செய்து பறக்கவிடுகிறார்கள். இந்தப் புதுமைகள் இப்பொழுதுதான் கண்டறியப்பட்டன.

பறவைகள் வாயுவைத் தமக்குச் சுவாதீனப்படுத்திக்கொண்டு பறந்து செல்லுகின்றன. வாயுமண்டலத்தை ஊடுருவிச் செல்ல அவற்றின் சிறகுகள் மறையாணிபோ லிருக்கின்றன. ஆகவே பக்ஷிகள் மேலே கிளம்பவும் பறந்து செல்லவும் தம் சிறகுகளால் வாயுவை உதைத்துத் தள்ளவேண்டுவது அவசியம். ஆதலால் பறவைபோலப் பறப்பது மிகவும் ஆச்சரியமான செய்கையாம்; அது எளிதான காரியமல்ல. பறக்கும் உபாயத்தைச் சிறு பறவைகள் கற்றுக்கொள்ளவேண்டும். பறப்பதற்குத் தேகப்பிரயாசை அதிகமாகவேண்டும். வாயுமண்டலத்தையெதிர்த்துச் செல்வதென்றால் எளிதல்ல; மிகுந்த ஸாமர்த்தியமுள்ள பறவையே அதில் ஜயம் பெறுகிறது. விசையாய் ஓடுவது, தாண்டுவது, குதிப்பது முதலானவை நம்முள் சிலர்க்குப் பழக்கமாயிருப்பதுபோல் பறப்பது பக்ஷிகளுக்கு ஸாதகமாயிருக்கிறது. பறப்பதனால் உண்டாகும் ஆநந்தத்தைப் பறவைகளே அனுபவிக்கின்றன. இப்படியே ஸகல பிராணிகளும் தமக்கு அளிக்கப்பட்ட சக்திக்கு ஏற்றதான ஆனந்தத்தை அனுபவிக்கின்றன. ஆகையால், பக்ஷிபோலப் பறப்பதாவது, ஊக்கத்துடன் வருந்தி வேலைசெய்வதேயாம். சோம்பேறியான மனிதர்கள் பறவைகள் பறப்பதிலுள்ள புதுமைகளை நன்றாய்ப் படித்துத் தீர்க்கமாய் ஆலோசித்துப் பார்ப்பார்களானால், தாமும் பக்ஷியைப்போலப் பறக்கவேண்டுமென்று ஆசை கொள்வார்களென்பதில் சந்தேகமில்லை; பிறகு அவர்கள் ஒருபொழுதும் சோம்பேறியாயிருக்கப் பிரியப்படார்கள்; பக்ஷிகள் மிகச் சுறுசுறுப்புள்ளவைகளா யிருப்பதனாலேயே அவைகளுக்கு அப்படிப்பட்ட சுவாதீனமும் சுகவாழ்க்கையும் கிடைத்திருக்கின்றன.

மாணுக்கர்களுக்கு ஒரு கடிதம்.

ஜீவஹிம்ஸை நிவாரணத்திற்காக 1866 ம்-வருஷத்தில் அமெரிக்காவிலே ஹென்ரி பர்க்கு என்பவர் ஒரு சங்கம் ஸ்தாபிக்கலானார். வாயில்லா ஜந்துக்களைக் காப்பாற்றுவதற்காக அமெரிக்காவிலே முதலில் ஏற்பட்ட சங்கம் அதுதான். அதேவிதமான சங்கங்கள் தேசமெல்லா முண்டாகி இந்த நன்மை செய்தல் தேசமெங்கும் பரவவேண்டுமென்பது அவருடைய உறுதியான மனோரதம். இப்படிப்பட்ட சங்கமொன்று ஏற்படவேண்டியது அவ்வளவாக அவசியமில்லையென்று நீங்கள் ஒருவேளை நினைக்கலாம்; ஏனென்றால், ஒரு தீங்கும் நமக்குச் செய்யாத சாதுவான வாயில்லா ஜந்துக்களுக்கு வேண்டுமென்று கொடுமை செய்து குற்றவாளியாகிறவர்கள் பலருண்டென்பதை நீங்கள் தெரிந்துகொள்ளாதிருக்கிறீர்கள். பர்க்கு துரை லோகோபகாரமான இக்காரியத்தை 1866-ம் வருஷத்தில் செய்யத் தொடங்கினபோது பல ஜனங்கள் இப்படியே அபிப்பிராயப்பட்டிருந்தார்கள். நாம் தடுக்கவேண்டியதாய் அப்படிப்பட்ட கொடுமை நடப்பதே யில்லையென்று சிலர் வாதித்தார்கள். தாம் பிரசித்தி ஸம்பாதிக்க வேண்டுமென்று அதற்காகவே பர்க்கு துரை ஏதோ முயற்சி செய்கிறார் என்று மற்றவர்கள் நினைத்தார்கள். ஆயினும் பர்க்கு துரை மாத்திரம், பயங்கரமான கொடுமைகள் வாயில்லா ஜந்துக்களுக்குச் செய்யப்படுகின்றனவென்றும், அந்தக் கொடுமைகள் மற்றப் பிரஜைகள் கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும், அதைக் கண்டறிய வேண்டுமென்று ஆவல்கொள்ளுகிறவனுக்கு நன்றாய் விளங்குமென்றும் தெரிந்துகொண்டார். வாஸ்தவத்தில் அத்தேசத்து நியூயார்க்கு நகரத்தில் வண்டி யோட்டிக்கொண்டு போகும் வண்டிக்காரர்கள் இப்படிப்பட்ட கொடுமைகளைச் செய்யாதநாள் ஒன்றுகூட இல்லை. வண்டிகளில் குதிரைகள் இழுக்க முடியாமல் அளவுக்கு மிஞ்சிய சுமை ஏற்றிவிடுவார்கள். அதை இழுக்கக் குதிரைகளுக்குச் சக்தியில்லாமல்போனாலும், அதன் கால் நொண்டியானாலும், காலிலும் கழுத்திலும் முதுகிலும் புண்ணானாலும் அவையொன்றையும் பாராமல் அந்த எளிய பிராணியை அடித்தோட்ட வண்டிக்காரர் பாடுபடுகிறார்கள்.

இப்படிப்பட்ட கொடுமைகளை அடக்கவேண்டுமென்றுதீர்மானித்து பர்க்கு துரையவர்கள் முதலில் ஜீவஜந்து ரக்ஷணத்திற்காக ஒரு நல்ல சட்டம் ராஜாங்கத்தார் மூலமாக நிருமித்துக்கொண்டு அந்நகரத்தில் தெருத்தெருவாய்ச் சென்று யாவரும் அந்தச்சட்டத்திற்கு உட்பட்டு நடக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தினார். வாயில்லா ஜீவன்களை அடித்து வருத்துவோரையும், வண்டியில் அளவுக்குமிஞ்சின சுமையேற்றினவர்களையும், கால் நொண்டியாகவாவது நோயினால் வருத்தப்பட்டுக்கொண்டாவது வேறுவிதமாக வேலைசெய்ய உதவியற்றதாகவாவது இருக்கும் ஜீவன்களை வண்டியில் கட்டி ஓட்டுகிறவர்களையும் பிடித்துக் குற்றவாளிகளாக்கி நியாயாதிபதியினிடம் கொண்டுபோய் அபராதம் போடும்படியாகவும் சிறையில் அடைக்கும்படியாகவும் செய்தார். இது மிகவும் வருத்தமான வேலை; பலபேருக்கு விரோதமான வேலை. அவர் இப்படிச்செய்வது கண்டு முதலில் பலர் அவனைப் பார்த்து நகைத்தார்கள்; பலர் ஏளனம் செய்தார்கள்; பிறகு திட்டவும் தலைப்பட்டுக் கடைசியில் பயமுறுத்தியும் பார்த்தார்கள். ஆயினும் அவர் ஒன்றுக்கும் சலியாதவராய்த் தாம் பிடித்த பிடியை விடாமல் தெருக்களில் ஜீவஹிம்ஸையான காரியங்கள் கண்ணில்படாமலொழியுமளவும்பாடுபட்டுவந்தார்.

இப்படி லோகோபகாரமான பெரிய காரியங்களெல்லாம் முதலில் மிகப் பிரயாசமாயும் பலர் பார்த்துப் பரிஹாஸஞ் செய்யத்தக்கவையாயுமேயிருக்கும். ஆயினும் அவைகளைப் பார்த்துச் சலியாமல் விடாமுயற்சியாகப் பாடுபடுகிறவனே காரியசித்தியடைவான்.

ஜீவஹிம்ஸை நிவாரண சங்கம் பல விடங்களிலு மேற்பட்டது.

அப்படிப்பட்ட ஜீவஹிம்ஸை நிவாரண சங்கங்கள் அதே மேல்வரியாகக்கொண்டு பிறகு பல தேசங்களிலும் ஏற்பட்டதுபோல, இச்சென்னையிலும் 1877-ம் வருஷம் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு மேலும் மேலும் அபிவிருத்தியடைந்து வருகிறது. இந்தச் சங்கத்தார் பல உத்தியோகஸ்தர்களை யேற்படுத்தி இச்சென்னைமாநகரில் அங்கங்கே பூராயமாய்ப் பார்த்துக்கொண்டிருந்து ஜீவஹிம்ஸைகள் கண்ணில் அகப்பட்டால், அந்தந்தக் குற்றத்திற்குத் தகுந்தபடி அக்குற்றவாளிகளை எச்சரித்தும், பயமுறுத்தியும், தண்டனைக்கு ஆளாக்கியும் ஜீவகாருணியத்தைப் போதிக்கப் பாடுபட்டு வருகிறார்கள். இவர்களன்றியும் இவ்விதமான நாகரிகத் தேர்ச்சியில் அபிமானமுள்ளவர்கள், அறியாமையாலாவது கொடுந்தன்மையினாலாவது இச்சென்னை ராஜதானியில் எவ்விடத்திலாயினும் ஜீவஹிம்ஸையான காரியங்கள் நடக்கக்கண்டு இச்சங்கத்தாருக்கு அவற்றைத் தெரிவித்தால், அவைகளையும் கேட்டுத் தக்கபடி தண்டனை நடத்திப் பிராணிகளைப் பரிபாலிக்கப் பிரயாசைப்பட்டு வருகிறார்கள்.

ஆகையால், பிள்ளைகளே! நீங்களும் இவ்விஷயங்களை நன்றாகப் படித்தறிந்து ஜீவகாருணியமுள்ளவர்களாகி நாகரிகத் தேர்ச்சியுடையவராகுங்கள். பிள்ளைகளே! தாம் செய்வது குற்றமான காரியமென்று தெரியாமலே உலகத்தில் பலர் கொடுமை செய்துவிடுகிறார்கள். குளிர்காலத்தில் ஒருவன் தன் குதிரையை முதுகின்மேல் கம்பளி போரா

மலே குதிரை குளிரால் வருந்த வெளியே நிறுத்திவிடுகிறான்; தனக்குப் போர்த்துக்கொள்ள அப்பொழுது கம்பளி அவசியம் வேண்டியிருப்பது போல் அந்த வாயில்லா ஜீவனுக்கும் வேண்டுமென்பதை அவன் ஆலோசிப்பதில்லை. நல்வார்த்தையாகவே நீங்கள் இவ்விஷயத்தை அவனுக்கு அறிவிப்பீர்களானால், அவன் அதைச் சந்தோஷமாகவே கேட்டுக் குதிரையின்மேல் கம்பளி போர்த்துவிடுவான். இதனால் ஒருவருக்கும் வருத்தமில்லாமலே ஒருவிதமான கொடுமை அடங்கிப்போய் விடுமல்லவா?

சில தருணங்களில் மனிதர்களுக்குக் கோபகுணம் அதிகமாகி, தமக்கு இப்படிப்பட்ட பொல்லாத கோபம் வந்திருக்கிறதென்பது தெரியாமலே தம்மையும் மறந்து துன்பம் செய்யத் தலைப்படுகிறார்கள். எப்படியென்றால், வண்டியில் கட்டியோட்டும்பொழுது குதிரை கீழே விழுந்துவிடுகிறது. அத்தருணத்தில் குதிரையை வண்டியினின்றும் அவிழ்த்துவிட்டால், அந்த எளிய பிராணி தானே எழுந்து உற்சாகமடையும். அது தெரியாமல் வண்டிக்காரன் கோபம் தலைக்கேறிக் குதிரையை அடித்து உபத்திரவப்படுத்தத் தலைப்படுகிறான். இப்படிப்பட்ட ஸமயங்களில் அந்த வண்டிக்காரனிடத்தில் பக்ஷமான வார்த்தைகள் சொல்லுவோமானால், அப்பொழுதே அவனுடைய கோபம் அடங்கிப் பொறுமை உண்டாகிக் குதிரையை அடிப்பதை அவன் நிறுத்திவிடுவான்; குதிரையும் அந்த ஹிம்ஸையினின்று விடுவிக்கப்பட்டதாகும். ஆகையால் ஜீவஹிம்ஸை செய்பவர்களுடன் போராடாமல் நல்வார்த்தை சொல்லியே அவர்களுடைய மனதை நாம் மாற்றிவிடக்கூடுமென்றால், இது நாம் செய்யக்கூடிய எவ்வளவு எளிதான நற்காரியம் பாருங்கள்.

நீங்கள் எவ்வளவு நல்வார்த்தை சொல்லியும் அதை அந்தக் கொடியவர்கள் கேளாமல் மேலும் மேலும் அதிகமான மூர்க்கத்தையே காட்டுவாரானால், அப்பொழுது நீங்கள் அவர்களுடன் போராடுவதில் பயனில்லை; உடனே ஸமீபத்திலுள்ள போலீசு சேவகரிடமாவது, இச்சங்கத்தின் உத்தியோகஸ்தரிடமாவது தெரிவித்துவிட்டால் அதுவே போதுமானது; அவர்கள் அவனுடைய கொடுமையை ஏற்றபடி அடக்கிவிடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் எவரும் அந்தத் தருணம் கிடைக்காத பக்ஷத்தில், உன்மேல் யான் பிரியாது செய்வேன் என்று சொல்லிப் பயமுறுத்தவேண்டும். அதனால் அவன் அடங்குவதைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படும்படியாகும். அந்த வழியிலும் அவன் வசப்படாதபக்ஷத்தில், அவன் இப்படிப்பட்டவனென்று அடையாளம் பார்த்துக்கொண்டு, அவனுடைய பெயரையும் வண்டியி லெழுதியிருக்கிற வண்டி எண்ணையும், அவன் கொடுமைசெய்த காலம் இடம் கொடுமையின் தன்மை இவைகளையும் குறித்துக்கொண்டு அவற்றை இச்சங்கத்தாருக்குத் தெரிவித்தால், அவர்கள் அந்த மனிதனைக் கண்டு பிடித்து, மறுபடி அவன் அப்படிப்பட்ட கொடுமை செய்யாதவழி தேடுவார்கள். அப்படிப்பட்ட குற்றவாளிகள் இந்தச் சங்கத்து உத்தியோகஸ்தர்களைக் கண்ணெதிரே காண்பார்களானால், உடனே தங்களுக்குச் சிக்ஷை நேர்ந்துவிடுமென்று பயந்து தக்ஷணமே கொடுமை செய்வதைக் கைவிடுகிறார்கள்.

வண்டியில் மாடோ குதிரையோ இழுக்க முடியாத சுமை யேற்றியிருக்கவாவது, கால் நொண்டியான ஜீவனையாயினும் புண்ணுள்ள ஜீவனையாயினும் வண்டியில் கட்டி யோட்டவாவது நீங்கள் காண்பீர்களானால், அந்த வண்டியின் எண்ணையெழுதிக்கொண்டு உடனே இந்தச் சங்கத்தாருக்கு அந்தச் செய்தியைத் தெரிவியுங்கள். ஆனால் நீங்கள் வண்டிக்காரர்மீது சொல்லுகிற குற்றம் உண்மையாயிருக்கவேண்டும்; ஏனென்றால், அது உண்மையென்பதை விசாரணை செய்வதற்கே காலம் வீணாய்ச் செலவழிந்துபோகிறது; குற்றத்தைக் கண்டவுடனே தெரிவியாமற்போனால் பிறகு அதைக் கண்டறிவதும் அஸாத்தியமாகிவிடுகிறது.

ஆதலால் பாடசாலைப் பிள்ளைகளும் பெண்களும் தாம் கண்ணெதிரில் காணும் இப்படிப்பட்ட ஜீவஹிம்ஸைகளைப் பார்த்துப் பரிதாபப்பட்டு மேற்சொன்னவிதமாக அவைகளை விலக்கப் பாடுபடுவார்களானால், ஜீவகாருணியம் அவர்களிடத்தில் குடிகொள்வது மாத்திரமேயல்லாமல், நாளளவில் ஜீவஹிம்ஸையும் அநேகமாய் ஒழிந்துபோய்விடும். ஜீவஹிம்ஸை நிவாரண சங்க மேற்பட்டிருக்குமிடங்களில் நடக்கும் ஜீவஹிம்ஸைகளைப்பற்றி அங்குள்ள சங்கத்தாருக்குத் தெரிவித்துக்கொள்ளலாம். ஜீவஹிம்ஸை நிவாரண சங்கம் ஸ்தாபிக்கப்படாத நாடுகளில் இப்படிப்பட்ட குற்றம் நடக்கக் கண்டால், அங்குள்ள அதிகாரிகளுக்கு அதைத் தெரிவித்து அவர்கள் மூலமாய் அக்குற்றத்தை விலக்கப் பாடுபடவேண்டும். இப்படியே யாவரும் நடந்து உலகத்திற்கு நன்மை செய்யப் புகுந்தால், கொடுமையும் ஜீவஹிம்ஸையும் அநேகமா யொழிந்து இவ்வுலகத்தில் எல்லா ஜீவன்களும் சுகமாக வாழலாகும். நாமும் நமது கடமையைச் செய்தவர்களாகிக் கடவுளுடைய கடாக்ஷத்திற்குப் பாத்திரமாவோம்.

குரங்கு வேட்டையின் கொடுமை.

வனத்திலே மிருகங்களை வேட்டையாடுகிற ஒரு வேடன் ஒருநாள் ஒரு பெரிய ஆலமரத்தடியில் குரங்கு ஒன்று இருக்கக் கண்டு அதை அடித்துத் தன் கூடாரத்திற்கு எடுத்துக்கொண்டு போயினான். அந்தக் குரங்கை வேடன் அடித்ததைக் கண்டவுடனே நூற்றுக்கணக்கான குரங்

குகள் கீச்சிட்டுக்கொண்டு ஓடிவந்து அந்த வேடனுடைய கூடாரத்தைச் சுற்றிக்கொண்டு அவனுடன் யுத்தம் செய்யத் துணிந்தவைபோல் ஓடியும் எழும்பியும் பெருங் கூச்சலிட்டும் அதிகமான உபத்திரவஞ்செய்யத் தலைப்பட்டன. அதுகண்டு வேடன் மிகக் கோபங்கொண்டு கூடாரத்தைவிட்டு வெளியே வந்து துப்பாக்கியைக் கையில் பிடித்து அந்தக் குரங்குகளுக்குப் பயம் காட்டினான். அதைப் பார்த்துக் குரங்குகள் அவன் தங்களையும் சுட்டுவிடுவானோவென்று பயந்து எல்லாம் அப்பால் ஓடிப்போயின. ஆனாலும், அவைகளுக்கெல்லாம் தலைமையான பெரிய குரங்குமாத்திரம் இருந்தவிடத்தை விட்டு அசையாமல் பயங்கரமாய்க் கூச்சலிட்டுக்கொண்டு அங்கேயே நின்றது. அந்த வேடனோ, அந்தக் குரங்கினுடைய பரிதாபத்தைப் பார்த்து, தான் அநியாயமாய் ஒரு குரங்கைக் கொன்றுவிட்டதைப்பற்றி அனுதாபப்பட்டு, பெரிய குரங்கைச் சுட மனந் துணியவில்லை. அவனால் கூடியவரையில் எந்தவிதமான பயங்காட்டினாலும் அது அவ்விடத்தை விட்டு நகருவதாகக் காணப்படவில்லை. கடைசியில் அக்குரங்கு, வேடன் கூடாரவாயிலில் போய்ப் பரிதாபமாய் அழத் தொடங்கிற்று. வேடன் அங்கே வந்து பார்த்தான். கைகளை நீட்டி நீட்டிக் குரங்கு காட்டுகிற குறிகளைப் பார்க்கையில், இறந்துபோன குரங்குப் பிணத்தையாவது கொடுத்துவிடும்படி அது வேண்டிக் கேட்பதாகத் தெரிந்தது. அப்படியே வேடன் செத்த குரங்கைக் கூடாரத்து வெளியே கொண்டுவந்து வைத்தான். அதைக் கண்டு பெரிய குரங்கு மிகுந்த துக்கத்துடனே அந்தப் பிணத்தைக் கையாலெடுத்து மார்போடு அணைத்துக்கொண்டு மெல்ல மெல்ல நடந்து, தன் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருந்த தோழர்களிடம் போய்ச் சேர்ந்தது. அதுமுதல் அந்த வேடன் தான் குரங்குகளை அடிப்பதை நிறுத்திவிட்டான். அவன் மாத்திரமேயன்று; அன்றையதினம் நடந்த இந்த விசனகரமான காட்சியைக் கண்டவர்கள் எல்லாருமே தாம் ஒருபொழுதும் குரங்குகளைக் கொலைசெய்யலாகாதென்று தீர்மானம் செய்துகொண்டார்கள்.

ஜீவகாருணியப் பயிற்சி.

வாயில்லா ஜந்துக்களுக்குள்ள பாத்தியதைகளை நன்குமதித்துக் கொண்டாடும்படி சிறுபிள்ளைகளுக்குக் கற்பிப்பதற்காகப் பல தேசங்களில் பலவிதமான சங்கங்கள் ஏற்பட்டுவருகின்றன. வாயில்லா ஜந்துக்களெல்லாம் நமக்கு அடிமைப்பட்டவைகளேயென்றும், அவைகளை நாம் நீதி நியாயங்களை அனுசரித்து அன்பும் ஆதரவுமாய் விவேகத்துடன் பரிபாலித்துவரவேண்டுமென்றும், அவைகளுக்குள்ள பாத்தியதையை நாம் ஒருபோதும் மறவாமல் அவைகளை ஆள்வது நமது கடமையென்றும் இவ்விஷயங்களைச் சிறுவர் சிறுமிகளுக்குக் கற்பிக்கும்பொருட்டே அந்தச் சபைகள் ஏற்பட்டவை. தாம் அனுபவிக்கிற துன்பம் இப்படிப்பட்ட தென்பதை வெளிப்படையாகச் சொல்ல வாயில்லாத எளிய ஜந்துக்கள் வருத்தப்படுவதற்காகவேயோ இப்பூமியில் படைக்கப்பட்டன. மனிதர்களில் ஒரு சிறுபிள்ளை துன்பப்பட்டால் அவனுக்கு உதவிசெய்ய உடனே ஆயிரம்பேர் ஓடிவருகிறார்களே. வாயில்லா ஜந்துக்களுடைய வருத்தமும் அப்படிப்பட்டதன்றோ? எளிய ஜந்துக்களுக்குப் பேச வாயுண்டாகிப் பல மிருகங்கள் ஒன்றுகூடித் தம்முடைய நியாயங்களை எடுத்துச் சொல்லப் புகுந்தால், அப்பொழுதாவது தாம் ஜீவஜந்துக்கள் விஷயத்தில் செய்யும் ஹிம்ஸை இப்படிப்பட்டவையென்று விளங்குமோ என்னவோ? சிறுவர் ஜீவன்களை ஹிம்ஸிக்கிறார்களென்றால், அது பெற்றோருடைய குற்றமேயன்றி வேறன்று. சிறுபிள்ளைகள் புத்தி தெரிகிறவரையில் செய்யும் குற்றங்களெல்லாம் பெற்றோரைச் சேருமென்று இந்து தரும சாஸ்திரங்கள் இதற்காகவே முறையிடுகின்றன. அதன்படி வாயில்லா ஜந்துக்களைப் பிள்ளைகள் ஹிம்ஸிப்பதற்கெல்லாம் பெற்றோர்களே உத்தரவாத மாகவேண்டுமென்கிற சட்டம் சீக்கிரமே ஏற்படுமானால், தக்ஷணமே பெற்றோர் பிள்ளைகளுக்கு ஜீவகாருணிய விஷயங்களைக் கற்பிக்க ஆவல் கொள்வார்கள். இத்தேசத்தில் ஜீவஹிம்ஸை விசேஷமாக நடப்பதற்குக் காரணம் முக்கியமாய் அறியாமையேதவிர மற்றொன்று மல்லவென்று நமது கவர்னர் அவர்களும் வருஷாந்த மஹா சபையில் வெளியிட்டிருக்கிறார். ஆதலால், அவ்வறியாமை நீங்கினால் ஜீவஹிம்ஸையும் அநேகமாய் ஒழியுமென்பதற்கு ஆக்ஷேபமில்லை. இதனோடு சாஸ்திர பரிசோதனைக்காக ஜீவன்களை அங்கச்சேதம் செய்வதும், விளையாட்டென்று பேரிட்டு வேட்டையாடுவதும் தண்டனைக் கிடமானவையென்று சட்டமுமொன்று ஏற்பட்டுப்போனால் அது வாயில்லா ஜந்துக்களுக்குப் பெரும் பாக்கியமாகும். அப்படிப்பட்ட காலமும் சீக்கிரமே வருமென்று எதிர்பார்க்கிறோம்.

நாகப்பூச்சி கதை.

(தூண்டிலுக்குச் சிறுவர்கள் நாகப்பூச்சி பிடித்தல்.)

ஒரு பிரபு ஒருநாள் வண்டியிலேறிக்கொண்டு வெளியே போனபோது வழியில் அடுத்த புலத்தில் சில பிள்ளைகள் என்னவோ குத்தித் தோண்டிக்கொண்டிருந்தார்கள். அந்த வயல் அப்பொழுதுதான் புதிதாய் உழப்பட்டிருந்தது. பிள்ளைகள் அங்கே அதிக ஆவலோடு வேலைசெய்துகொண்டிருந்ததைப் பார்த்து அவன் வண்டியை

வேலியோரமாக நிறுத்தி அந்தப் பிள்ளைகளை அழைத்து, சிறுவர்காள்! நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்? என்று கேட்டார்.

அதைக் கேட்டு அப்பிள்ளைகளில் பெரியவனான ஒருவன் அங்கிருந்தபடியே 'தூண்டிலுக்கு இரை தேடுகிறோம்' என்று உடனே மறுமொழி சொன்னான். பக்கத்திலிருந்த ஒரு சிறுபெண் அந்தப் பிரபுவை வேலியின் வழியாய்க் குனிந்து பார்த்துத் தன் கையிலிருந்த பல்லாயைக் குலுக்கி அவனுக்குக் காட்டி 'நாங்கள் மீன்பிடிக்கப் போகிறோம்' என்றாள்.

அதைக்கேட்டு அந்தப் பிரபு வண்டியை விட்டிறங்கிப் பிள்ளைகளண்டை போய் அவர்கள் வைத்திருந்த பல்லாயில் 20—30 நாகப்பூச்சிகள் இருக்கக் கண்டு, 'இன்றைபதினம் நீங்கள் எத்தனை மீன் பிடிக்கலாமென்று நினைத்திருக்கிறீர்கள்?' என்று கேட்டார்.

அதற்குப் பெரிய பையன், 'எத்தனையோ எங்களுக்குத் தெரியாது; ஆனாலும் தூண்டில் இரை மாத்திரம் யதேஷ்டமாய்ப் பிடித்துக்கொள்வோம். தூண்டில் முள்ளில் மாட்டும்பொழுது இரண்டொன்று நழுவிப்போகுமாகையால், கையிருப்பில் மீனிரை அதிகமாயிருக்கவேண்டும்' என்று சொன்னான்.

'நல்லது பிள்ளாய், இச்சிறுமி தன் தூண்டிலில் தானே இரைவைத்துக்கொள்வாளோ, அல்லது நீ வைத்துக்கொடுப்பாயோ?' என்று ஜீவகாருணியமுள்ள கனவான் மறுபடி கேட்டதற்கு, சிறுமி, 'நானேதான் வைத்துக்கொள்வேன். இந்தப் பூச்சிகளைப் பிடிக்க நான் பயப்படமாட்டேன்; இவைகளுக்குத் தலையே இல்லையே; இவை என்னைக் கடிக்கமாட்டா. இந்த அற்பமான நாகப்பூச்சிகளை நாம் என்ன செய்தால்தானென்ன? இவைகளுக்குக் கொஞ்சமும் நோவு தோன்றாதே' என்று சொன்னாள்.

அதைக்கேட்டு அந்தப் பிரபு, 'நீ அப்படியா நினைக்கிறாய்? கடவுளுடைய படைப்பான இப்பிரபஞ்சத்தில் அற்பமென்பது ஒன்றும் கிடையாது; உற்றுப் பார்த்தால், ஒன்றைவிட ஒன்று மிகவும் அற்புதமாய் நமக்கு அதிகமான ஆநந்தத்தை விளைவிக்கும். இன்றையதினம் நீங்கள் மீன்பிடிக்க ஏரிக்குப் போவதை விட்டு என்னோடு வீட்டுக்கு வருவீர்களானால், இந்தச் சிறுபூச்சியிலுள்ள அதிசயங்களை உங்களுக்கு நான் நன்றாய்க் காட்டுவேன்' என்று சொன்னார்.

நாகப்பூச்சியின் உடம்பிலுள்ள அதிசயங்களைப் பார்த்தல்.

அதைக்கேட்டு அங்கிருந்த பிள்ளைகள் நாகப்பூச்சியின் அதிசயத்தைப் பார்க்கஆசைகொண்டவர்களாய் அந்தப் பிரபுவுடனே போக ஒப்புக்கொள்ள, யாவரும் வண்டியி லேறிக்கொண்டு வீட்டிற்குப் போனார்கள். வீட்டிற்குப் போனவுடனே பிரபுவானவர் ஒரு பூதக்கண்ணாடியை எடுத்து, அதன் மூலமாய்ச் சிறிய நாகப்பூச்சியைப் பார்க்கும்படி ஒவ்வொரு பிள்ளைக்கும் காட்டினார். பூதக்கண்ணாடியில் சிறிய நாகபூச்சி மிகவும் பெரிய உருவமாய்த் தோன்றுவதைப் பார்த்து எல்லாப் பிள்ளைகளும் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். அதனுடலை நுட்பமாய் உற்றுப்பார்க்கையில், அதன் உடம்பு முழுவதும் சங்கிலிபோல வளையம் வளையமாகக் கோக்கப்பட்டிருப்பதையும், அந்த உடம்பில் மொட்டையான மயிர்கள் பல அடர்ந்திருப்பதையும் கண்டார்கள். ஒரு பெண் ஒரு பூச்சியின் உடம்பிலுள்ள வளையங்களை யெண்ணிப்பார்த்து, இப்பூச்சியின் உடம்பில் நூற்றறுபது (160) வளையங்கள் இருக்கின்றன வென்றாள். அப்படியே மற்றொரு பெண் மற்றொரு பூச்சியைப் பார்த்து, இதனுடம்பில் இருநூற்றெழுபத்தெட்டு(278)வளையங்கள் நானெண்ணினேன் என்றாள்.

அதுகேட்டு அந்தப் பிரபு சொல்லுகிறார்: இப்பூச்சியின் உடம்பிலுள்ள அதிசயம் இவ்வளவு தானோ? இவ்வுடம்பிலுள்ள மயிர்களே இந்தப்பூச்சி ஊர்ந்துபோவதற்கு ஆதாரமாயிருக்கின்றன. இந்த மயிர் நமது கண்ணுக்குப் புலப்படாமல் மிகச் சிறியவையாயிருப்பதாலேதான், 'பாம்பின் கால் பாம்புக்கே தெரியும்' என்று ஒரு பழமொழியும் வழங்கலாயிற்று. நமது சிறுமி நாகப்பூச்சிக்கு வாயுமில்லை தலையுமில்லையென்று சொன்னாளே; இதோ இந்த உடம்பின் நுனியில் இதற்கு வாயிருப்பதைப் பாருங்கள். இந்த வாயினால் இது இலைகளையும் கற்களையும் பொறுக்கி எடுத்துக் கொண்டுபோகும். எதற்காகவென்று நினைக்கிறீர்கள்? இலைகளை அவை உணவாக உபயோகப்படுத்திக்கொள்வது மாத்திரமேயன்றி, தாம் படுக்கும் பள்ளத்தில் மெத்தைபோலப் பரப்பிக்கொள்ளவும் உபயோகிக்கின்றன. மேலும், தமது பாழிக்குள் மற்றொரு பூச்சியும் வாராதபடி அவை கற்களாலும் இலைகளாலும் அதன் துவாரத்தை நன்றாய் அடைத்துப்போடுகின்றன. இலைகளை நாகப்பூச்சி தன் பாழிக்குள் கொண்டுபோகும்பொழுது துவாரத்தின் அளவுக்குத் தகுந்தபடி இலைகளைச் சரியாய்ச் சுருட்டி மடித்துக்கொண்டு போவதைப் பார்க்க வெகு ஆச்சரியமாயிருக்கும். இதனால் நாகப் பூச்சிகளுக்கு நம்மைப்போலவே ஆலோசிக்கும் திறமையு முண்டென்பது நன்றாக விளங்குகிறதல்லவா?

இப்படியே மிகச் சிறிய நாகப்பூச்சியின் சிறிய உடலில் மற்ற ஜீவன்களுக்கு இருப்பதுபோலவே இரைப்பை, கருப்பை, முட்டைப்பை, ஜலப்பை, மலப்பை, நரம்பு நாடி, உள்ளம் முதலான பல உறுப்புக்களும் அமைந்திருக்கின்றனவென்று தேக தத்துவ பரீக்ஷைசெய்த பண்டிதர்கள் பரிசோதித்துப்பார்த்திருக்கிறார்கள். நாகப்பூச்சிகள் கருத்தரிக்

கும் விதம் மிகவும் ஆச்சரியமானது. ஒவ்வொரு பூச்சியினிடத்திலும் ஆண்ஸத்துபெண்ஸத்து ஆகிய இரண்டும் அமைந்து உள்ளன. ஒரு பூச்சி தன்னிடமுள்ள ஆண்ஸத்தை மற்றொரு பூச்சியின் உடலிலுள்ள பெண்ஸத்தோடு கலக்கும்படி சேர்க்கிறது; அப்படியே அந்தப் பூச்சியும் மாற்றிக்கொண்டு கருத்தரிக்கின்றதெனக் கண்டறிந்திருக்கிறார்கள். நாகப்பூச்சி முட்டைகள் சிறிய பயறளவு இருக்கும். ஒரு முட்டைக்குள் இரண்டு பூச்சிகளு மிருப்பதுண்டு. மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளில் இந்தப் பூச்சிகளுக்கு கண்ணும் காதுமில்லை, அந்தப் பொறிகளால் ஆகவேண்டிய காரியத்தை மோப்பத்தினலேயே நாகப்பூச்சிகள் அறிந்து செய்கின்றன. அதனல் இந்தப் பூச்சிகளை மூவறிவு உயிர் என்று சொல்வார்கள்—என்றார்.

நாகப்பூச்சியின் உயிர்வாழ்க்கை.

அதைக்கேட்டு ஒரு சிறுமி, 'ஐயா! நாகப்பூச்சிகள் மழை பெய்யும்போது மழையோடு வருகின்றனவென்று நாங்கள் இதுவரையில் நினைத்திருந்தோம். அப்படியில்லாமல் இப்போது நீங்கள் சொல்லுகிறபடி முட்டையிலிருந்து உண்டாவதானல், மழை பெய்யும்பொழுதே இவை அதிகமாகக் காணப்படுகின்றன; மற்றப்பொழுது காணப்படுவதில்லையே? அதேன்?' என்று கேட்க, அவர் சொல்லுகிறார்:

'பெண்ணே! சொல்லுகிறேன் கேள்: நாகப்பூச்சிகளுக்கு ஈரம் அதிகமாக வேண்டும். மழையில்லாமல் பூமி வறண்டுபோனல், அப்பூச்சிகள் பூமியில் அதிக ஆழம் உள்ளே போய்விடுகின்றன. அங்கே ஈரம் அதிகமாயிருக்கிறதல்லவா? மழை பெய்கிறவரையில் அவை அங்கேயே இருந்து, மழை பெய்து பூமி குளிர்ந்தபின் மேலே வருகின்றன. இராத்திரியே இவை இரைதேடுகிற காலமாகையால் அநேகமாய் இப்பூச்சி இராக்காலத்திலேயே வெளிப்படும். ஒரேஇடத்தில் இவை நிலையாகக் குடியிருக்கிறதென்கிற ஏற்பாடு இல்லையாகையால் பழைய விடத்தை விட்டு மேலே வந்துவிட்டால், மறுபடி அவ்விடம் போகாமல் மேலேயே வஸிக்க இடமேற்படுத்திக்கொள்ளும். அவை செய்யவேண்டிய வேலை இரவிலேயே முடிவுபெறுவதில்லையாகையால், பல பூச்சிகள் பொழுதுவிடிந்தபின் பாழி தேடிக்கொள்ள ஸாத்தியப்படாமல் தரையின்மேலேயே யிருந்து செத்துக்கிடக்கக் காண்கிறோம்.

நாகப்பூச்சியின் உபயோகம்.

'பெண்ணே! இந்த நாகப்பூச்சிகளால் நமக்கென்ன உபயோகமென்பதை நீங்கள் எப்பொழுதாவது நினைத்திருப்பீர்களோ? மீன் பிடிப்பதற்கு உபயோகமென்பது தவிர உங்களுக்கு மற்றொன்றும் தெரியாதே. நான் சொல்லுகிறேன் கேள்: இப்பூச்சிகள் பயிர்த்தொழிலாளிகளுக்கு மிகவும் உபயோகமானவை. ஒரு ஏகரா நிலத்தில் 26,000 நாகப்பூச்சிகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தப் பூச்சிகள் பிரதி வருஷமும் பயிரிடும் நிலத்திற்கு 14 டன் முதல் 18 டன் வரையிலும் ஸாரத்தைக் கொண்டு சேர்த்து நிலத்திற்குக் கொழுமை உண்டாக்குகின்றன. நிலத்தைக் கிண்டிக்கிளறி உள்ளே காற்றுப் புகும்படி செய்கின்றன. மேலும், அழுகிப்போகிற தம் உணவுகளால் எருவுமிடுகின்றன. யுக்தி யாலோசனையோடு காரியங்களை ஒழுங்காய்ச் செய்கின்றவையாயும், இவ்வளவு உபயோகமுள்ளவையாயுமிருக்கும் பிராணியையோ நீங்கள் அற்ப ஜந்துவென்று எண்ணி உபத்திரவப்படுத்துவது? இப்படிப்பட்ட பூச்சியையோ நீங்கள் தூண்டில் முள்ளிலே கோத்துக் கொன்று மீனுக்கு இரையாகக் கொடுப்பது?' என்று சொன்னர்.

அதைக்கேட்ட சிறுவர்களெல்லாம், தாம்தெரியாமையால் செய்த தப்புக்கார்யத்திற்காகத் துக்கித்து மன்னிப்பு கேட்டுக்கொண்டு, இனிமேல் இப்படிப்பட்ட கொடுமைசெய்வதில்லையென்று வாக்களித்து விட்டுச் சந்தோஷத்துடனே போய்விட்டார்கள்.

குதிரைகளுக்குச் செய்யும் கொடுமை.

குதிரைகளது வேண்டுகோள்.

கொடுமையென்பது ஒருவிதமல்ல; பலவிதம். சிலவேளைகளில் சிறு பிள்ளைகள் பளுவான சுமைகளை யேற்றி எங்களை வேகமாகத் துரத்தத் தலைப்படுகிறார்கள்; அந்தப் பாரமான சுமையை இழுக்க முடியாமையால், நாங்கள் மெல்ல மெல்ல மூட்டைவண்டியை இழுத்துக்கொண்டு நடந்துபோகப் பிரியப்படுகிறோம். பிள்ளைகள் இதைத் தெரிந்துகொள்ளாமல் குதிரைகளை யடித்துக் கடிவாளக் கயிற்றை இழுத்து உபத்திரவப்படுத்துகிறார்களே! இது கொடுமையல்லவா? இப்படி எவனவது ஒருவன் செய்ய விரும்பினல், உடனே அவன் சற்று நிதானித்து, நாம் அப்படி ஒரு குதிரையாகப் பிறந்து இத்தனை பாரமான மூட்டையை இழுத்துக்கொண்டு போக நேரிட்டால் நமக்கு எப்படியிருக்குமென்று ஆலோசித்துப் பார்க்கவேண்டுகிறோம். அப்படி நடந்து போகும்பொழுது தாகத்தினல் நாவறண்டுபோகுமன்றோ? அதைச்சொல்லிக்கொள்ளக் குதிரையான அவனுக்கு வாயுமிராது. அப்படி நாவறண்டு வருந்தித் தவிக்கையில் பின்னே ஒருவன் பரிதாபமில்லாமலே ஓயாமல் சவுக்கால் அடித்தும் கடிவாளக் கயிற்றை வாய்நோக இழுத்தும் உபத்திரவப்படுத்துவான். அப்படிச் செய்தால் உங்களுக்குப் பொறுக்கமுடியுமா? எங்களுக்குமப்படித்தானே. நீங்கள் வண்டியோட்டும்பொழுது

இதை நினைத்துக்கொள்ள வேண்டாமா? கூடிய வகையில் சவுக்கை விசேஷமாய் உபயோகப்படுத்தாதிருக்கப் பழகுங்கள். எங்களுடைய உடம்பும் உங்களுடைய உடம்பு போன்றதுதானே.

பலர் குதிரையின்மேல் கம்பளியும் போராமல் குளிரில் அல்லாட விடுகிருர்கள். அதனேடுகூட, அவைகளின்மேல் குளிர் தாக்காமலிருக்கும்படி கடவுள் அவைகளுக்குக் கொடுத்திருக்கிற சிறந்த போர்வையான மயிர்களையும் அநேகர் கத்தரித்துப் போடுகிருர்களே. குளிர்காலத்தில் சாதாரணமான உடைகள் போதாமல் நீங்கள் பின்னும் அதிகமான கம்பளி முதலிய நல்ல போர்வைகள் போர்த்துக்கொள்ளுகிறீர்களல்லவா? அந்த நியாயத்தை நீங்கள் உங்களை அடுத்த நல்ல பிராணியான எங்கள் விஷயத்திலும் உபயோகிக்க வேண்டாமா? குதிரைகள் குளிரில் அல்லாடினுல் அவைகளுக்குப் பல விதமான நோய்கள் உண்டாகும். மயிரைக் கத்தரிப்பதனுல் அவற்றின் ஆயுளும் குறைந்துபோகுமென்பதை நீங்கள் கேட்டதில்லையோ? ஆகையால், எங்களுக்குச் சிறிதும் வருத்தம் உண்டாகாதிருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். எங்களுடைய வருத்தங்களை உங்களுக்குத் தெரியச்சொல்ல எங்களுக்கு வாயில்லையானுலும், அந்த ஹிம்ஸை எங்களால் சகிக்க முடியவில்லையே! நாங்கள் எவ்வளவு சுகமாயிருக்கிருேமோ, அவ்வளவும் உங்களுக்குச் சுகமென்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

வாயில்லா ஜந்துக்களுக்கு வைத்தியசாலை.

மனிதர்களுக்கு உபயோகமாக உழைக்கிற வாயில்லா ஜந்துக்கள் விஷயத்தில் தீவாந்தரங்களிலே பல மனிதர்கள் அதிகமான அபிமானமுள்ளவர்களாயிருக்கிருர்க ளென்பதைக் கேட்க மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. நோயில் அடிபடுகிற பல வாயில்லாத ஜந்துக்களுக்கு நல்ல வைத்தியம் செய்யும்படி தரும வைத்தியசாலைகள் நாடுகளிலும் நகரங்களிலும் விசேஷமா யேற்படுத்த வேண்டுமென்று பல தேசத்தார் பரிந்து பேசுகிருர்கள். மனிதர்களுக்கு வைத்தியசாலையாக அங்கங்கே மிகப் பெரியதாய் அற்புதமான பலசாலைகள் கட்டப்பட்டு, ராஜாங்கத்தார், நாட்டார், நகரத்தார், தனித்தனி தருமபிரபுக்கள் ஆகிய பலராலும் பரிபாலிக்கப்பட்டு வருவது நமக்கு நன்ருய்த் தெரிந்திருக்கிறதே! அப்படியிருக்க, மனிதர்களுக்கு நேசனும் துணையாயுமிருந்து உழைக்கிற எளிய பிராணிகள் அநேகம் நோயில் அடிபட்டு ஆதரிப்பாரில்லாமல் அல்லாடுகின்றனவே, அவைகளுடைய வைத்தியத்திற்காக வைத்தியசாலைகள் ஏற்படுத்தப்படாமலிருப்பது நமக்குமிகுந்த துக்கத்தை யுண்டாக்குகிறதல்லவா? வேலைசெய்வதற்கு நூற்றுக்கணக்கான குதிரைகளை வைத்து உபயோகிக்கிற ஒவ்வொரு நகரத்திலும் வாயில்லா ஜந்துக்களுக்குச் சிறந்த வைத்தியசாலை ஸ்தாபித்து அந்நகரத்தார் அங்கே நல்ல வைத்தியர்களையும், சிகிச்சோபசாரம் செய்பவர்களையும் ஏற்படுத்திவைத்தால், அது எவ்வளவு நன்மையாயிருக்கும்! குதிரைமுதலான நாற்கால் ஜந்துக்களுக்கு நோய் நீங்குவது மாத்திரமேயன்று; அவைகளை வேலைசெய்ய வைத்திருக்கும் மனிதர்களுக்கும் மிகுந்த சவுக்கியமுண்டாகுமல்லவா?

வேலைக்காரர்களை வருத்துவதும், பெண்களை ஹிம்ஸிப்பதும், ஏழை ஜனங்களுடைய பணத்தைத் திருடுவதும், நம்பின நேசனுக்குத் துரோகஞ் செய்வதும் கொடிய பாதகங்களல்லவா? அவைபோலவே, திக்கில்லாத வாயில்லா ஜீவன்களை ஆதரவின்றி அல்லாடவிடுவதும் கொடிய பாவமேயாம்.

பேசமாட்டாத பிராணிகள் விசனத்தை வெளியிடுதல்.

காட்டு மிருகங்களைக் கொண்டுவந்து வேடிக்கை காட்டும் மிருகாசயங்களில் ஒன்றிலே ஒரு கூட்டில் ஆணும் பெண்ணுமாய் இரண்டு சிங்கங்கள் விடப்பட்டிருந்தன. ஒருநாள் அங்குள்ள அதிசயங்களைக் காணப் போனபொழுது அங்கே அந்தச் சிங்கங்கள் இரண்டும் சிறிதும் அசையாமல் பிரமை பிடித்தவைபோல் ஒரே நிலையாக நின்றுகொண்டிருக்கக் கண்டோம். அங்கே போன எங்களையும் அவை திரும்பிக் கண் எடுத்துப் பார்க்கவேயில்லை. இதென்ன அதிசயமென்று நாங்கள் வியப்புடனே பார்த்துக்கொண்டிருக்க, ஆண் சிங்கமானது மிகப் பெரியதான தனது முன்னங்காலொன்றை யெடுத்து, அதை மெதுவாக மெல்லப் பெண்சிங்கத்தின் முகத்தின்மேல் வைத்தது. நாங்கள் அங்கே நின்றவளவில் அந்த இரண்டு சிங்கங்களும் அதேவிதமாகவே நின்றுகொண்டிருந்தன. அவைகள் என் அப்படி நின்றுகொண்டிருந்தனவோ, அதன் கருத்து எங்களுக்கு இன்னதென்று விளங்கவில்லை. தாங்கமுடியாத துக்கத்தையும், மிகவும் அதிகமான மனக்கவலையையும் சித்திரத்தி லெழுதிக்காட்டும் திறமுடையவனுன சிற்பிகூட அதன் கருத்து இன்னதென்று கண்டறிய முடியாமல் வருந்தினுன். பிறகு நான் அந்த மிருகாசய விசாரணைத் தலைவனைக் கண்டு இதென்ன புதுமையென்று கேட்டதற்கு, 'அந்தச் சிங்கத்தின் குட்டி அன்றையதினம் காலையில் இறந்துபோயிற்று' என்று அவைகளுடைய விசனத்தின் காரணத்தை வெளியிட்டான்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1905.